இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 05.04.2026

# இடியாய் இறங்கும் மோடி!

**வணிக சிலிண்டர்களின் விலையை ஏற்றி அப்பாவிகள் தலையில் இடியாய் இறங்கி இருக்கிறார் பிரதமர் மோடி. மக்களுக்காக எந்த நன்மையையும் சிந்திக்கத் தெரியாதவர் மோடி என்பது மீண்டும் மீண்டும் மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது.**

நாடு முழுவதும் வணிக சிலிண்டர்களின் விலை 203 ரூபாய் கூடுதலாகி விட்டது. எரிபொருள் விலை அதிகரிப்பானது அனைத்து மக்களையும் பாதித்து வருகிறது. பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் வீடுகளுக்கு 14.20 கிலோ எடையிலும், வணிகப் பயன்பாட்டுக்கு 19 கிலோ எடையிலும் கேஸ் சிலிண்டர்களை வழங்கி வருகிறது. ஒவ்வொரு மாதமும் இதன் விலையை பொதுத்துறை நிறுவனங்கள் மாற்றி அமைக்கும். இதன்படி இரண்டு நாட்களுக்கு முன்னால் கடுமையாக விலையை ஏற்றி விட்டார்கள்.

19 கிலோ எடை கொண்ட வணிக சிலிண்டர் சென்னையில் இது வரை 2,043 ரூபாய் 50 பைசாவுக்கு விற்பனையாகி வந்தது. இப்போது 203 ரூபாய் உயர்ந்து 2,246 ரூபாய் 50 பைசாவாக உயர்த்தப்பட்டு விட்டது. இதன் காரணமாக உணவகங்களின் உணவுப் பொருட்களின் விலை கடுமையாக எகிறி விட்டது. ஏற்கனவே சிலிண்டர் தட்டுப்பாட்டால் பல உணவகங்கள் மூடப்பட்டு விட்டன. பல உணவகங்களில் ஒரு சில உணவுப் பொருட்கள் மட்டுமே தயாரிக்கிறார்கள். சிலிண்டர் விலை கூடியதால் உணவுப் பொருட்கள் விலையும் கூடிவிட்டது. இது சாதாரண சாமானிய மக்களைக் கடுமையாக பாதிக்கத் தொடங்கி இருக்கிறது.

விமான எரி பொருட்களின் விலையும் கடுமையாக உயர்ந்து விட்டது. பிப்ரவரி மாதம் இருந்த விலையை விட இப்போது 114.5 விழுக்காடு அதிகம் ஆகும். வரலாற்றின் முதல் முறையாக ஒரு கிலோ விமான எரிபொருள் விலை 2 லட்சம் ரூபாயாக உயர்ந்துவிட்டது. இதனால் விமானக் கட்டணங்கள் மிகக் கடுமையாக உயர்ந்து விட்டன.

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் நடத்தும் தாக்குதலும், அதற்குப் பதிலடியாக ஈரான் நடத்தும் தாக்குதலும், உலகம் முழுவதும் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. வளைகுடா நாடுகளில் இருந்து உலக நாடுகளுக்கு கச்சா எண்ணெய் கொண்டு செல்வது தடைபட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் எண்ணெய் வயல்கள், இயற்கை எரிவாயு உற்பத்தி ஆலைகள் மூடப்பட்டுள்ளன. ஜலசந்தியில் சரக்கு கப்பல் போக்குவரத்து முடங்கி உள்ளது.போர் காரணமாக கத்தாரின் முன்னணி நிறுவனங்கள் எல்.பி.ஜி. உற்பத்தி ஆலைகளை மூடிவிட்டன. ஹார்முஸ் ஜலசந்தியில் போக்குவரத்து முடங்கியிருப்பதால் இந்திய பொதுத் துறை, தனியார் நிறுவனங்களால் எல்.பி.ஜி.யை இறக்குமதி செய்ய முடியவில்லை.

இதன் எதிர்விளைவாக நாடு முழுவதும் சமையல் மற்றும் வர்த்தக கேஸ் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனைச் சரி செய்ய வேண்டியது ஒன்றிய பா.ஜ.க. அரசின் கடமை ஆகும். சமையல் கேஸ் தட்டுப்பாடு குறித்து பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஆனால் உருப்படியாக எதுவும் செய்யவில்லை. கூட்டம் குறித்த செய்தியில் எந்தத் தீர்வும் சொல்லப்படவில்லை. தட்டுப்பாடு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளச்' சொல்லி இருக்கிறார் பிரதமர். தட்டுப்பாட்டைத் தடுக்கும் தீர்வை அவர் சொல்லவில்லை.

**"வணிக எரிவாயுத் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள உணவகங்களுக்குத் தேவையான மாற்று ஏற்பாடு செய்யப்பட வேண்டும். போரால் ஏற்பட்டுள்ள எரிவாயுத் தட்டுப்பாட்டினால் பொது மக்களும் வணிக நிறுவனங்களும் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளும் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்" என்று பிரதமருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல நாட்களுக்கு முன் கடிதம் அனுப்பினார்கள். ஆனாலும் ஒன்றிய அரசு எந்த நடவடிக்கையையும் முறையானதாகச் செய்யவில்லை.**

சிலிண்டர் விலை உயர்வைத் தொடர்ந்து பெட்ரோல் விலை கூடும். டீசல் விலை கூடும். தனியார் நிறுவனங்கள் தங்கள் விலையை உயர்த்திவிட்டன. அடுத்து பொதுத்துறை நிறுவனங்களும் விலையைக் கூட்டி விடும். இதனடிப்படையில் பல்வேறு அவசியமான பொருட்களின் விலையும் அதிகரிக்கத் தான் போகிறது. இது ஒட்டு மொத்த மக்களையும் பாதிக்கவே செய்யும். அனைத்துத் தரப்பு மக்களையும் பாதிக்கத்தான் போகிறது.

**இதை உணர்ந்துதான், 'கொரோனா காலத்தைப் போல' என்று பிரதமர் மோடி சொன்னார் போலும். 'கொரோனா காலத்தில் உங்களைக் கைவிட்டதைப்போல கைவிடுவேன்' என்றும் சொல்லி விட்டார் பிரதமர் மோடி.**

**பொருளாதாரத்தை மிக மோசமாகக் கையாள்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. தொலைநோக்குப் பார்வையுடன் எந்தப் பிரச்சினை பற்றியும் சிந்திக்கவில்லை பா.ஜ.க. அரசு. மக்களுக்கு ஒரு பாதிப்பு ஏற்பட்டால் அதனைத் தீர்க்க வேண்டும் என்ற அக்கறை பா.ஜ.க. அரசுக்கு இல்லை. 'போர் நடக்கிறது, போர் நடந்தால் இதை அனுபவிக்கத்தான் வேண்டும்' என்ற அலட்சியமே பா.ஜ.க. அரசிடம் இருக்கிறது.**

இந்த பாதிப்புகள் அனைத்தையும் பட்டியலிட்ட காங்கிரஸ் தலைவர் கார்கே, '**பா.ஜ.க.வின் கொள்ளை தினம்**' என்று வர்ணித்துள்ளார். அதுதான் உண்மை. மக்களைப் பற்றி ஒன்றிய பா.ஜ.க. அரசு கொஞ்சமும் கவலைப்படவில்லை. மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறம் இல்லை.

இந்தியாவிலேயே இருக்காமல் உலகம் முழுக்க சுற்றும் பிரதமர், தனது உலகப் புகழை வைத்து முன்கூட்டியே இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்க வேண்டாமா? தடுத்திருக்க வேண்டாமா? தட்டுப்பாட்டைத் தவிர்த்திருக்க வேண்டாமா? 'விஸ்வகுரு'வுக்கு இது முடியாதா? இயலாதா?

●●

## முதல்வர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# அ.ம.மு.க. மாவட்டச் செயலாளர்கள் - நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!

## அ.ம.மு.க. மாநிலத் தலைவர் – முன்னாள் எம்.பி. சி.கோபால் தலைமையில்!



சென்னை, ஏப்.5-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் அ.ம.மு.க. மாநில தலைவர் சி.கோபால், Ex.M.L.A., Ex.M.P., தலைமையில் அ.ம.மு.க.வைச் சேர்ந்த மாநில தேர்தல் பிரிவு செயலாளர், மாவட்டச் செயலாளர் என்.ஜி.பார்த்திபன், Ex.M.L.A., மாநில இளம்பெண்கள் பாசறை செயலாளர் திருமதி என்.ஷோபனா நடராஜன், செங்கல்பட்டு தெற்கு மாவட்டச்செயலாளர் எம்.கோதண்டபாணி, Ex.M.L.A., மாவட்ட அவைத் தலைவர் நெமிலி தே.பாண்டுரங்கன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஏ.ஆதம்சாயபு, எல்.சங்கீதா, மாவட்ட பொருளாளர் ஜிஎம்.மூர்த்தி மற்றும் ஒன்றியச் செயலாளர்கள் நெமிலி மேற்கு டி.ஜி.மணி, நெமிலி கிழக்கு கோ.சி.மணிவண்ணன், முன்னாள் ஒன்றியக்குழுத் தலைவர் கோமதி மணிவண்ணன், சோளிங்கர் மேற்கு எம்.பழனி,

அரக்கோணம் கிழக்கு ஜி.துளசிராமன், அரண்கோணம் மேற்கு ஜி.பாபு, சோளிங்கர் கிழக்கு எஸ்.அரி - நகரச் செயலாளர்கள் சோளிங்கர் என்.சீனிவாசன், மேல்விஷாரம் கே.அப்ரார், காட்பாடி பகுதி செயலாளர் கவுதம், பேரூராட்சி செயலாளர்கள் நெமிலி பி.குமார், பனப்பாக்கம், பி.ஹேமச்சந்திரன், கலவை ஆர்.பரத்குமார், தக்கோலம் டி.பலராமன் மற்றும் மாவட்ட அனைத்து அணி செயலாளர்கள், சோளிங்கர் நகர கவுன்சிலர்கள் என்.டி.சுரேஷ், திருமதி எஸ்.ராதிகாசீனிவாசன், திருமதி ஜி.காஞ்சனாகோபிநாதன், திருமதி கே.ராதாகுமார் - நெமிலி பேரூராட்சி கவுன்சிலர் பி.தனசேகரன் உள்ளிட்ட 80க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (03.04.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், அ.ம.மு.க. மாநில தலைவர் சி.கோபால், Ex.M.L.A., Ex.M.P., தலைமையில் அ.ம.மு.க. வைச் சேர்ந்த மாநில தேர்தல் பிரிவு செயலாளர், மாவட்டச் செயலாளர் என்.ஜி.பார்த்திபன், Ex.M.L.A., மாநில இளம்பெண்கள் பாசறை செயலாளர் திருமதி என்.ஷோபனாநடராஜன், செங்கல்பட்டு தெற்கு மாவட்டச் செயலாளர் எம்.கோதண்டபாணி, Ex.M.L.A., மாவட்ட அவைத்தலைவர் நெமிலி தே.பாண்டுரங்கன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஏ.ஆதம்சாயபு, எல்.சங்கீதா,

மாவட்ட பொருளாளர் ஜி.எம்.மூர்த்தி ஒன்றியச் செயலாளர்கள் நெமிலி மேற்கு டி.ஜி.மணி, நெமிலி கிழக்கு கோ.சி.மணிவண்ணன், முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் கோமதி மணிவண்ணன், சோளிங்கர் மேற்கு எம்.பழனி, அரக்கோணம் கிழக்கு ஜி.துளசி ராமன், அரக்கோணம் மேற்கு ஜி.பாபு, சோளிங்கர் கிழக்கு எஸ்.அரி, பள்ளிப்பட்டு இ.எம்.நடராஜன் - நகரச் செயலாளர்கள் சோளிங்கர் என்.சீனிவாசன், மேல்விஷாரம் கே.அப்ரார், காட்பாடி கவுதம், பேரூராட்சி செயலாளர்கள் நெமிலி பி.குமார், பனப்பாக்கம், பி.ஹேமச்சந்திரன், கலவை ஆர்.பரத்குமார், தக்கோலம் டி.பலராமன், மாவட்ட இதய தெய்வம் அம்மா பேரவை செயலாளர் எஸ்.வேடராஜன், மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளர் எஸ்.ரகு, மாவட்ட மாணவர் அணிச் செயலாளர் ஆர்.வசந்தகுமார்ஜெயின், மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் ஆர்.சுமதி, மாவட்ட வழக்கறிஞர் பிரிவு தலைவர் என்.ஜி.தமிழ்ச்செல்வன், மாவட்ட மருத்துவர் அணிச் செயலாளர் டாக்டர் எம்.தினேஷ், மாவட்ட மீனவர் அணிச் செயலாளர் என்.சிவகுமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் எம்.பிரபாகரன், மாவட்ட வர்த்தக அணிச் செயலாளர் வி.பி.என்.ரமேஷ், வேலூர் மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி செயலாளர் ஆர்.எஸ்.துரைமுருகன், மாவட்ட இளைஞர் அணி இணைச் செயலாளர் கே.எம்.இளஞ்செழியன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைச் செயலாளர் ஜே.ரஞ்சித்குமார், சோளிங்கர் நகர கவுன்சிலர்கள் என்.டி.சுரேஷ், திருமதி எஸ்.ராதிகாசீனிவாசன், திருமதி ஜி.காஞ்சனாகோபிநாதன், திருமதி கே.ராதாகுமார் - நெமிலி பேரூராட்சி கவுன்சிலர் பி.தனசேகரன் மற்றும்

வழக்கறிஞர் எஸ்.முராரி, இராணிப்பேட்டை நகர துணைச் செயலாளர் எம்.பரத், வழக்கறிஞர் பிரிவு துணைச் செயலாளர் கே.ராஜா, ஐடி விங் துணைச் செயலாளர் ஆர்.சந்தோஷ், சோளிங்கர் நகர மாணவர் அணிச் செயலாளர் ஜே.மதன்குமார், மாவட்ட எம்.ஜி.ஆர்.மன்ற துணைச் செயலாளர் எம்.சிவக்குமார், மாவட்ட ஐடி விங் துணைச் செயலாளர் வி.எம்.அத்திக்ரஹ்மான், மாவட்ட மாணவர் அணி துணைச் செயலாளர் பி.மணிஷ்ஜெயின், முன்னாள் மாநில பேரவை துணைச் செயலாளர் வி.உமாசங்கர், முன்னாள் கீழ்களத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் எம்.தணிகைவேல், அரக்கோணம் கிழக்கு ஒன்றிய இளைஞர் அணிச் செயலாளர் பி.ரங்கநாதன், அரக்கோணம் கிழக்கு ஒன்றிய பொருளாளர் எஸ்.ராஜேஷ், பொதட்டூர்பேட்டை நகரச் செயலாளர் எம்.ஓ.ஜானகி ராமன், பொதட்டூர் பேட்டை ஒன்றியச் செயலாளர் எப்.எம்.எஸ்.நடராஜன், மாவட்டப் பிரதிநிதி பி.எஸ்.சுரேஷ், கிளைச் செயலாளர் இ.எ.ராமகிருஷ்ணன், நகர தகவல் தெழில்நுட்ப பிரிவு செயலாளர் கே.எஸ்.முருகன், நகர மாணவர் அணிச் செயலாளர் பி.தினகரன், மாவட்ட இ.செ.த.தொ. என்.டி. வேலு, வி.குருமூர்த்தி, கீழ்களத்தூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ராதிகா தணிகைவேல், சோளிங்கர் ஒன்றிய இளைஞர் அணி செயலாளர் ஏ.முபாரக், பி.ரங்கநாதன், மாவட்ட பிரதிநிதி நெமிலி ஜி.பாபு, ஒன்றிய அவைத்தலைவர் கோபால், ராணிப்பேட்டை எம்.சரவணன், சத்துவாச்சாரி பகுதி செயலாளர் கோபி, அரக்கோணம் மேற்கு ஒன்றிய துணைச் செயலாளர் ஆனந்தன், ஒன்றிய பொருளாளர் பிரேம்நாத், ஊராட்சி செயலாளர் கனகராஜ், காட்பாடி வி.நரேஷ்குமார் உள்ளிட்ட 80க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ ஆகியோர் உடனிருந்தனர்.

## வேட்பாளர், அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் முன்னிலையில்

# இராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. தேர்தல் அலுவலகம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. திறந்து வைத்தார்!

நாமக்கல், ஏப்.5-

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் (தனி) சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக மருத்துவர் அமைச்சர் மா.மதிவேந்தன் போட்டியிட மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ராசிபுரம் தொகுதிக்கான தி.மு.க. கூட்டணி கட்சியின் தேர்தல் அலுவலகம் திறப்பு விழா நடைபெற்றது.

ராசிபுரம் பழைய பேருந்து நிலையம் அருகே திமுக தேர்தல் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தை நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ் குமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

இதில் அமைச்சரும் தொகுதி வேட்பாளருமான மா.மதிவேந்தன், தொகுதி தேர்தல் பார்வையாளர் நன்னியூர் ராஜேந்திரன், முன்னாள் எம்.எல்.ஏ., கே.பி. ராமசாமி, தொகுதி தேர்தல் பணி குழு பொறுப்பாளர் ஏ.கே. பாலச்சந்திரன், நகர தி.மு.க. செயலாளர் என். ஆர்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து விழாவில் பேசிய கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே. ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி., கடந்த ஐந்து ஆண்டுகளில் தொகுதியில் நிறைவேற்றப் பட்ட குடிநீர் வசதி, சாலை வசதி, பேருந்து வசதி, அடிப்படை வளர்ச்சித் திட்ட பணிகள், மக்கள் நல திட்டங்கள் போன்றவை குறித்துப் பேசினார்.

இந்த விழாவில் காங்கிரஸ், தே.மு.தி.க., விடுதலைச் சிறுத்தைகள், கம்யூனிஸ்ட் போன்ற கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த மாவட்ட, நகர, ஒன்றிய, நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர்.



திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற தி.மு.க. கூட்டணி வேட்பாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியை ஆதரித்து காட்டூர் அம்மன் நகர் பகுதியில் முனீஸ்வரன் கோயில் அருகே தேர்தல் பணிமனை அலுவலகத்தை கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு அவர்கள் திறந்து வைத்தார். மேலும் இந்நிகழ்வில் மாநகர கழக செயலாளர் மதிவாணன், மணப்பாறை சட்டமன்ற தொகுதி வேட்பாளர் அப்துல் சமது, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேகரன், வண்ணை அரங்கநாதன், மாநில அணி நிர்வாகி செந்தில், பகுதி கழகச் செயலாளர்கள் நீலமேகம், தர்மராஜ், சிவக்குமார், விஜயகுமார், நகர கழக செயலாளர் காயாம்பு, ஒன்றிய கழக செயலாளர்கள் கருணாநிதி, கங்காதரன், பேரூர் கழகச் செயலாளர் தங்கவேல், பெல் தொ.மு.ச பொதுச் செயலாளர் தீபன் உட்பட அணி அமைப்பாளர்கள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உட்பட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.